10th February 1959]

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) This Government have not recommended to the Government of India any special steps to bring down the cost of living;

(*b*) The cost of living is dependent not only on the prices of foodgrains but also on other factors. So far as prices of foodgrains are concerned, the National Development Council has decided that wholesale trading in foodgrains should be taken over by the State Governments. The Government of India are working out the details of the scheme and this Government will take necessary steps to implement the scheme on its receipt. Meanwhile this Government have decided to procure tentatively 2 lakhs tons of rice from the ensuing harvest for distribution through fair price shops. It has also been decided to fix controlled prices for paddy and rice at wholesale level. As the prices of other agricultural commodities normally centre round the prices of paddy and rice, it may be expected that with the control of the prices of paddy and rice, the prices of other commodities will also be held down.

Cost of living index

* 197 *Q*.—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the present cost of living index;

(*b*) the trend in the cost of living;

(*c*) the commodities that are mainly responsible for the rise or fall and the reasons therefor; and

(*d*) whether the availability of these indicate a further rise in the course of the next year or a fall in the cost of living index?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The cost of living index for December 1958 is 430.

(*b*) The trend in the cost of living index is upward, i.e., the cost of living index increased from 100 in 1939 to 351 in 1953 except for a decline in 1955 to 321 and it again rose to 430 in December 1958.

(*c*) Rice, dhal, meat, coconut, chillies, gingelly and firewood have contributed principally to the increase in the index, due to the rise in their prices.

(*d*) With the commencement of harvests and large arrivals of new crop the price of rice is expected to fall and consequently, the cost of living index is also expected to fall to some extent.

Sri K. SATTANATHA KARAYALAR : உணவு தானியங்களின் விலையேற்றத்தால் மட்டுமன்றி இதர பொருள்களின் விலையேற்றத்தாலும் வாழ்க்கைச் செலவுப் புள்ளி உயர்ந்திருக்கிறது என்று கனம் அமைச்சர் சொன்னார். விலையேறியுள்ள இதர பொருள்களுக்கும் விலைக் கட்டுப்பாடு கொண்டுவந்து விலைவாசி உயர்வதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதற்கு தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

[10th February 1959

Sri K. PONNIAN : இவ்வாறு வாழ்க்கை செலவுப் புள்ளி உயரும் காலத்தில் ஊழியர்களுக்கு, டியர்னஸ் அலவன்ஸுடன் வாழ்க்கைச் செலவுப் புள்ளி உயர்வுக்கு என்று ஓரளவு தொகையைச் சேர்த்துக் கொடுப்பதற்கு வகை செய்யும் சட்டம் இருக்கிறதா ? அப்படியானால் ஊழியர்களுக்கு அவ்வாறு அலவன்ஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களா ?

Mr. SPEAKER : ‘ யார் ’ கொடுத்துக் கொண்டிருக்கிறார்களா என்று கேட்கிறீர்கள் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் இதை என் சகா கனம் தொழில் அமைச்சரிடம் கேட்டால் அவர் பதில் அளிப்பார்.

Sri M. KALYANASUNDARAM : விலை ஏறக்கூடிய இன்னும் சில முக்கியமான பொருள்கள் விறகும் அடுப்புக் கரியும் ஆகும். அவைகளின் விலைகளைக் குறைக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் கூறியது உண்மைதான். விறகின் விலை உயர்வைத் தடுப்பதற்கு விறகுகள் அதிகம் கிடைக்கச் செய்யவேண்டும். இதற்காக, கிராமக் காடுகளிலும் மற்ற இடங்களிலும் விறகுக்கு வேண்டிய மரங்கள் வளர்க்கப் படுகின்றன. மேலும், நெய்வேலித் திட்டம் நடக்க ஆரம்பித்து விட்டால் விறகுச் செலவை (விறகின் உபயோகத்தை) ஓரளவு குறைக்கலாம்

Sri A. GOVINDASAMY : விலைவாசிகள் உயர்விற்குக் காரணஸ்தர்களாக இருப்பவர்கள் பதுக்கல்காரர்கள்தான் என்பது தெரிந்திருந்தும், பதுக்கல்காரர்களைக் கண்டு பிடிப்பதற்கு அரசாங்கம் இதுவரையில் நடவடிக்கை எடுக்காததற்குக் காரணம் என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : பதுக்கல் அதிகமாக இருக்கிறது. விலைவாசிகள் உயர்விற்கு அது தான் காரணம் என்று அரசாங்கம் கருதவில்லை. பதுக்கல்காரர்கள் சம்பந்தமாக கனம் அங்கத்தினரிடம் தகவல் இருந்தால் அதை நான் வரவேற்கிறேன். அவர் தகவல் கொடுத்தால், வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

Sri A. A. RASHEED : What was the cost of living index figure in December 1957 ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : **I am sorry,** Sir, I don’t have that figure with me now.

Sri M. KALYANASUNDARAM : சற்று முன்பு கனம் அமைச்சர் நெய்வேலித் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். சென்னை நகரத்திற்கு “ காஸ் ” ஸப்ளை செய்யக்கூடிய திட்டம் சர்க்காரின் ஆலோசனையில் இருக்கிறதா ? அது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அம்மாதிரியான திட்டம் இப்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை. ‘ ப்ரிகெட்ஸ் ’ சம்பந்தமாக நெய்வேலித் திட்டத்தைக் குறிப்பிட்டேன். ‘ ப்ரிகெட்ஸ் ’-ன் தேவை அதிகமாக இருக்கிறது. அதிகமாக மின்சாரம் உபயோகிக்கும் நாடுகளில் கூட ‘ ப்ரிகெட்ஸ் ’ அதிகமாகத் தேவைப்படுகின்றன. நெய்வேலித் திட்டம் நடக்க ஆரம்பித்தால் நமக்கு ‘ ப்ரிகெட்ஸ் ’ அதிகமாகக் கிடைக்கும் என்றுதான் நான் சொன்னேன்.